# ஆகஸ்ட் - 26 - சனி

**“உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்” (மத் 23:11)**

## முதல் வாசகம்: ரூத்து 2 :1 – 3,8 – 11, 4:13-17

நகோமிக்குப் போவாசு என்ற உறவினர் ஒருவர் இருந்தார். அவர் செல்வமும் செல்வாக்கும் உடையவர் எலிமலேக்கின் வழியில் உறவானவர். ரூத்து நகோமியிடம், ”நான் வயலுக்குப் போய், யார் என்னைக் கருணைக் கண்டுகொண்டு நோக்குவாரோ, அவர் பின்னே சென்று கதிர்களைப் பொறுக்கிக் கொண்டு வருகிறேன். எனக்கு அனுமதி தாரும் என்றார். அவரும், ”போய் வா, மகளே” என்றார். ரூத்து ஒருவயலுக்குப் போய் அறுவடையாளர்கள் பின்னால் சென்று, அவர்கள் சிந்திய கதிர்களைப் பொறுக்கிச் சேர்த்தார். தற்செயலாக அவர் போயிருந்த அந்த வயல் எலிமலேக்கிற்கு உறவினராக போவாசுக்கு உரியதாய் இருந்தது. பிறகு போவாசு ரூத்தை நோக்கி பெண்ணே நான் சொல்வதைக் கேள். இந்த வயலைத் தவிர வேறு எந்த வயலுக்கும் போய் நீ கதிர் பொறுக்க வேண்டாம். என் வயலில் வேலை செய்யும் பெண்களுடன் இங்கேயே இரு. அறுவடையாளர்கள் வேலை செய்யும் இடத்தை நன்றாகக் கவனித்து. அங்கே போய் அவர்கள் பின்னால் கதிர் பொறுக்கும் பெண்களோடு நீயும் இரு. எந்த வேலைக்காரனும் உனக்குத் தொந்தரவு கொடுக்ககூடாதென நான் கட்டளையிட்டிருக்கிறேன். உனக்குத் தாகம் எடுத்தால் அவர்கள் நிரப்பி வைத்துள்ள பாண்டங்களிலிருந்து தண்ணீர் அருந்திக்கொள் என்றார். ரூத்து போவாசின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி ”என்னை ஏன் இவ்வாறு கருணைக் கண்கொண்டு நோக்குகிறீர். அயல் நாட்டுப்பெண்ணாகிய என்னை ஏன் இவ்வளவு பரிவுடன் நடத்துகிறீர்? ” என்றுகேட்டார். போவாசு, ”உன் கணவன் இறந்ததிலிருந்து உன் மாமியாருக்காக நீ செய்துள்ள அனைத்தையும் கேள்விப்பட்டேன். உன் தந்தையையும் தாயையும் சொந்த நாட்டையும் துறந்துவிட்டு, முன்பின் தெரியாத ஓர் இனத்தாருடன் வாழ நீ வந்திருப்பது எனக்குத் தெரியும். இவ்வாறு போவாசு தாம் சொன்னபடியே ரூத்தைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று, அவரை மணந்து கொண்டார். அவர்கள் கூடி வாழ்ந்த போது, அவர் கருத்தரிக்க ஆண்டவர் அருள்கூர்ந்தார். ரூத்து ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார். ஊர்ப் பெண்கள் நகோமியைப் பார்த்து, ஆண்டவர் திருப்பெயர் போற்றி! போற்றி! உன்னைக் காக்கும் பொறுப்பினை உடையான் ஒருவனை அவர்தாம் அருளியுள்ளாரே. இஸ்ரயேலில் அவனது பெயரும் புகழுடன் ஓங்கித் திகழுவதாக! புதுவாழ்வுனக்கு அன்னவன் தருவான் முதுமையில் உனக்கு அன்னமும் அளிப்பான் உன்பால் கொண்ட அன்பால், உனக்கு மைந்தர் எழுவரின் மேலாய் விளங்கும், மருமகள் அவனை ஈன்றவள் அன்றோ!” என்று வாழ்த்தினார்கள். நகோமி குழந்தையைக் கையில் எடுத்து மார்போடணைத்துக் கொண்டார். அவரே, அதைப் பேணி வளர்க்கும் தாயானார். சுற்றுப்புறப் பெண்கள், நகோமிக்கு ஒரு மகன் பிறந்துள்ளான் என்று சொல்லி, அவனுக்கு ஓபேது என்று பெயரிட்டார்கள், அவனே தாவீதின் தந்தையான ஈசாயின் தந்தை.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர் ஆசி பெற்றவராய் இருப்பர்

## நற்செய்தி : மத்தேயு 23 : 1 – 12

பின்பு இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது : ”மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர்.ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்டமாட்டார்கள்.சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள்.தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள்.விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள். சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் ”ரபி” என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள்.இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார்.நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர்.உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்.தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்.

**தியானம்:** பணிவிடை பெற அன்று பணிவிடை புரிய வந்தேன் என்று சொன்ன யேசு அதனை செயலிலும் காட்டினார். எமது வாழ்வும் பணி செய்வதே. நாம் ஒவ்வொருவரும் பணி செய்கிறோம். நாம் செய்யும் தொழில், காரியம் எமக்காக மட்டும் அல்ல, அது மற்றவர்களுக்கும் பயன்படுகிறது. தொழிலாழர்களின் உழைப்பு முதலாழியை வாழ்விக்கின்றது. நம் உழைப்பு குடும்பத்தை வாழ வைக்கிறது. ஆனால் அதில் நீதி, நேர்மை இருக்க வேண்டும். பெரியவர்களாக இருக்க விரும்புவோர் தொண்டனாக மாற வேண்டும் எங்கிறார் யேசு. முதல் வாசகத்தில் நாம் பார்க்கும் ரூத்து ஒரு விதவை. அக்காலத்தில் விதவைகள் சமூகத்தால் புறக்கணிக்கப் பட்டார்கள். அவர்கள் பாவிகள், அதனால்தான் அவளின் கணவன் இறந்தார் என்ற மன நிலை இருந்தது. ஆனால் ரூத்து தனது கனவனை இழந்தாலும், வயதான தனது கணவனின் தாயாரை மதித்து பணிவிடை செய்த செயல் எல்லோரையும் வியக்க வைத்தது. அதனால் அவர் எல்லொரைப் போலவும் சமமாக மதிக்கப் படுவதை நாம் பார்க்கிறோம். எமது வாழ்வும், செயலும் அவ்வாறாகத்தான் இருக்க வேண்டு. சொல்வது ஒன்று, செய்வது வேறாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. வெளியில் நல்லவர்களாகவும், வீட்டில் அதற்கு மாறாகவும் வாழ்பவர்கள் அதிகம். குடும்பத்தவரை அடிமையாக நினைப்பது, தமது விருப்பு வெறுப்புகளை அவர்களில் திணிப்பதும் நல்லதல்ல. உள்ளும் புறமும் தூய்மையானதாக இருக்க வேண்டும். முயற்சி செய்வோமா?